**தலைப்பு 208 – தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 208 தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 திசெம்பர் 28 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 337.79 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 333.76 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 4.03 மில்லியன் அதாவது 1.2 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 159.87 | 157.85 | 2.02 | 1.3 |
| மூலதனம் | 177.92 | 175.91 | 2.01 | 1.1 |
| மொத்தம் | 337.79 | 333.76 | 4.03 | 1.2 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 20801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 13.00 | 12.90 | 6.00 | 7.79 | 45.00 | 32.19 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0149/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 9.3 மில்லியனாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 03 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 4.77 மில்லியன் ஆக இருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| பொது வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/001/0123/000 | 65,000 |
| 6000/0000/00/0016/0119/000 | 4,591,456 |

| | |
|---|---|
| 6000/0000/00/0002/0172/000 | 110,439 |
| | --------------- |
| மொத்தம் | 4,766,895 |
| | ======= |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தின் வாக்குப்பண பேரேடு நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

## 3.2 கட்டுநிதிக் கணக்கு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திறைசேரி கணனி பதிவின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கட்டுநிதிக் கணக்கின் வரவு மீதியானது ரூபா 9,282,458 ஆக இருந்ததுடன், ஒதுக்கீட்டுக் கணக்கின் திறைசேரி பதிவிற்கமைய அல்லது திணைக்கள புத்தகங்களின் பிரகாரமான மீதியொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

20801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

திணைக்கள புத்தகங்களுக்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் ஆண்டினுள்ளான மொத்த வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 13,654,282 ஆக இருப்பதுடன், திறைசேரி கணனி பதிவுகளுக்கமைய ஆண்டினுள்ளான மொத்த வரவு வைத்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 14,096,713 ஆகும். அதற்கமைய ரூபா 442,431 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) அருங்காட்சியக பொருட்களின் மதிப்பாய்வுகளை மேற்கொள்ளல்**

கொழும்பு அருங்காட்சியகத்தின் தொல்பொருளியல் பொருட்களுக்கான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும், அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பிராந்திய அருங்காட்சியகங்களின் தொல்பொருளியல் பொருட்களின் மதிப்பாய்வொன்று 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை பயன்படுத்தல்**

கொழும்பு அருங்காட்சியகம் மற்றும் மாகம்புர ரூஹுனு உரும அருங்காட்சியகம் ஆகியவை அமைந்துள்ள 4.9282 ஹெக்டெயர்கள் பரப்பளவான காணிகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இடை காலி சமுத்திர அருங்காட்சியகம், காலி தேசிய அருங்காட்சியகம் மற்றும் ஒல்லாந்தர் கால அருங்காட்சியகம் ஆகியவை அமைந்துள்ள நிலப்பகுதிக்கான நில வரைபடங்களை பெற்றுக்கொள்ளவும் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

**செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலான தாமதங்கள்**

செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) தேசிய அருங்காட்சியகத்தின் தீயணைப்பு பாதுகாப்பு கட்டமைப்பினை நிர்மாணிக்கும் ஒப்பந்தமானது 2015 ஒக்தோபர் 14 ஆந் திகதி கொழும்பில் அமைந்துள்ள தனியார் கம்பனியொன்றிற்கு வரியின்றி ரூபா 17,968,550 தொகைப் பணத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாணம் 2016 சனவரி 14 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு இனங்கியிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் இறுதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு தேசிய அருங்காட்சியகத்திற்கு கையளிப்பதற்கு தவறியிருந்தது.

(ஆ) இரத்தினபுரி அருங்காட்சியகத்தின் புதிய மலசலகூட கட்டமைப்பினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் சப்ரகமுவ மாகாண சபையின் பிராந்திய பொறியியல் சேவைகள் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2014 நவம்பர் 19 ஆந் திகதி பிராந்திய பொறியியல் சேவைகள் அலுவலகத்தினால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்காக அருங்காட்சியகங்கள் திணைக்களத்தினால் சப்ரகமுவ மாகாண பிரதேச பொறியியல் சேவைகள் அலுவலகத்திற்கு ரூபா 1,858,000 தொகை மூன்று சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 செப்தெம்பர் மாதம் வரையிலும் அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒரு வருட காலமாக காணப்பட்ட வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 130,162 பெறுமதியான 6 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 4 நிர்மாண பணிகளுக்காக அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் தனியார் ஒப்பந்ததாரரொருவரின் பெயரில் வரையப்பட்டு ரூபா 27,495,771 பெறுமதியான 10 காசோலைகள் அனுப்பப்பட்டு அந்த நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படாது 2017 மே மாதம் வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகளுக்குரிய பணிகள் உள்ளபடியாக நிறைவு செய்யப்பட்டிராத போது, இந்த காசோலைகள் வரையப்பட்டு அவற்றில் பெறுமதிகள் தவறாக ஒதுக்கீட்டுக் கணக்கின் செலவினங்களாக அறிக்கையிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்களை வெளிவாரி தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.

(அ) பழைய சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தினை குத்தகைக்கு வழங்குதல்

(i) அருங்காட்சியங்கள் திணைக்களத்திற்கு சொந்தமான 8000 கன அடி கொண்ட பழைய சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தின் லக்சல பரிசு மற்றும் நினைவுச் சின்னங்களின் விற்பனைக்கூடமொன்றினை நடாத்துவதற்காக மாதாந்தம் ரூபா 25,000 வாடகைக்கு லக்சல நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அரசாங்க மதிப்பீட்டாளரால் அந்த கட்டிடத்திற்காக ரூபா 801,000 மாதாந்த வாடகையாக அறிக்கையிடப்பட்டிருந்தமையால், 2016 ஆம் ஆண்டிற்கான வாடகை வருமானம் ரூபா 9,312,000 இனால் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ii) லக்சல நிறுவனத்தினால் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக அந்த கட்டிடத்தின் 500 கன அடி பரப்பளவான நிலப்பகுதி உணவு மற்றும் குடிபான விற்பனை நிலையமொன்றினை நடாத்திச் செல்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு மாதாந்தம் ரூபா 100,000 மற்றும் அந்த நிறுவனத்தின் அதிகரிக்கும் புரள்வின் அடிப்படையில் 7.5 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையான வாடகைக்கமைய இடை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு அருங்காட்சியகத்தின் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குதல்

அருங்காட்சியங்கள் திணைக்களத்திற்கு சொந்தமான சிற்றுண்டிச்சாலை நலன்புரிச் சங்கத்தினால் ரூபா 16,000 தொகையான வாடகைக்கு வெளிவாரி தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், மொத்த வருமானத்தை திணைக்களத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மாதாந்தம் ரூபா 6,000 ஆன வாடகை மாத்திரம் திணைக்களத்தின் வருமானத்திற்கும் எஞ்சிய ரூபா 10,000 தொகை நலன்புரி சங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 3.8 நட்டமும் இழப்பும்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 மார்ச் 16 ஆந் திகதி கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற களவு காரணமாக காணாமற்போன தொல்பொருட்களின் எண்ணிக்கை 221 ஆக இருந்ததுடன், அந்த பொருட்கள் ரூபா 4,440,140 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றுள் 94 பொருட்கள் ஆரம்ப நிலையிலும், மேலும் சில பொருட்களின் பகுதிகளாகவும் பெறுமதியான கற்களாக 57 அலகுகளும் மீளக் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய பொருட்கள் அழிவுற்றிருந்தன. 2017 யூன் மாதம் வரையிலும் அந்த பொருட்கள்

வழக்குப் பொருட்களாக நீதிமன்றத்தில் காணப்படுவதாக பதிற்கடமையாற்றும் அருங்காட்சியக பணிப்பாளர் நாயகத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரத்தினபுரி அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள அருங்காட்சியக அதிகாரி உத்தியோகபூர்வ இல்லத்தினை பழுதுபார்க்கும் தேவைப்பாடு இனங்காணப்பட்டு சப்ரகமுவ மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,079,000 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும், பழுதுபார்க்கப்படாத இந்தக் கட்டிடம் 2017 யூலை மாதமளவில் சிதிலமடைந்தவாறு காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் போது பழுதுபார்த்தலுக்காக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

---

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1942 இன் 31 ஆம் இலக்க தேசிய அருங்காட்சியகங்கள் கட்டளைச் சட்டத்தினை பரிசீலனை செய்து இலங்கையின் தற்கால மற்றும் எதிர்காலத் தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் புதிய அதிகாரச்சட்டமொன்றினை வடிவமைக்கும் நோக்கில் 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 14/1269/555/010 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது கலந்துரையாடப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கமைய சட்டமா அதிபர் திணைக்களத்தால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 2015 யூலை 07 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. 2017 மே மாதம் வரையிலும் புதிய அதிகாரச்சட்டத்தினை அங்கீகரிக்கும் பணி நிறைவடையாத காரணத்தால் தற்கால, மற்றும் எதிர்கால தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் திணைக்களத்தை மீள் கட்டமைக்கும் பணிகள் தாமதமடைந்திருந்தன.

(ஆ) இரத்தினபுரி அருங்காட்சியக தலைமைக் கட்டிடம் மற்றும் பிட கெய எனும் பெயரில் இனங்காணப்படும் கட்டிடத்தை பழுதுபார்க்கும் பணிகள் சப்ரகமுவ மாகாண சபையின் பொறியியல் சேவைகள் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 5,771,000 தொகையான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு 2015 ஒக்தோபர் 26 ஆந் திகதி அருங்காட்சியகங்கள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது பிராந்திய பொறியியல் சேவைகள் அலுவலகத்திற்கு ரூபா 5,771,000 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், பிடகெய கட்டிடத்தின் மாத்திரம் ரூபா 1,949,194 தொகைக்கு பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இந்த பழுதுபார்த்தல்களும் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) கொழும்பு அருங்காட்சியகத்தின் பாதுகாப்பு கெமரா (CCTV) முறைமையின் மீளெடுத்தல் (Back up) சேவை கணனியுடன் (Servers) ஒரு இடத்தில் மாத்திரம் பேணப்படுகின்றதுடன், இந்த இடத்தில் தீயணைப்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தச்சுக்கூடம் அமைந்துள்ள அருங்காட்சியக எல்லைப் பிரதேசத்தில் செவிலி தகரங்களை பயன்படுத்தி அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது.

(உ) அருங்காட்சியகத்தினை பார்வையிடுவதற்கு நாளொன்றிற்கு 800 மாணவர்களுக்கு அதிகமான எண்ணிக்கையானோர் வருகை தருகின்ற போதிலும், அவர்களுக்கு உணவு

அருந்துவதற்கான போசனசாலையொன்று காணப்பட வேண்டிய ஆகக்குறைந்த வசதிகளேனும் இல்லாதிருந்தமையால் அவர்களுக்கு புல் வெளிகளிலேயே உணவு அருந்தும் நிலை ஏற்பட்டுள்ளதாக 2017 மார்ச் 08 ஆந் திகதிய கணக்காய்வுத் தளப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) வாசிகசாலையில் நிலவிய குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாசிகசாலையிலுள்ள புத்தகங்களை கணனிமயப்படுத்துவதிலான தாமதங்கள் இடம்பெற்றுள்ளதாக கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. வாசிகசாலை கணனி பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 100 பக்கங்களுக்கு மேற்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை 162,620 மற்றும் 100 பக்கங்களை விட குறைந்த புத்தகங்களின் எண்ணிக்கை 40,338 ஆக இருந்த போதிலும், கணனிமயப்படுத்தப்பட்டிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 35,457 என 2017 மார்ச் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) பல வருடங்களாக வாசிகசாலையின் பராமரிப்பு நடவடிக்கைகளும் தேவையான பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) வாசிகசாலையின் உள்ளே மற்றும் வெளியே பாதுகாப்பு கெமரா முறைமையொன்று (CCTV) நிறுவப்பட்டிருந்த போதிலும், காட்சிக் கூடத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) தற்போது டிஜிட்டல் (Digital) மயப்படுத்தப்பட்டு வாசிகசாலைக்கு வழங்கப்பட்டுள்ள 80 ஓலைச்சுவடிகள், 15 அரிதான புத்தகங்கள் மற்றும் 1924 - 1925 ஆம் ஆண்டுகளின் வர்த்தமானி அறிவித்தல்கள் போன்றவற்றை பயனாளிகளுக்கு பரிசோதனை செய்வதற்கு தேவையான கணனிகள் நிறுவப்பட்டிருக்கவில்லை.

(எ) கொழும்பு அருங்காட்சியகத்தின் பாதுகாப்பு பிரிவின் குறைபாடுகள்

---

பாதுகாப்பு பிரிவிற்கு தீயணைப்பு பாதுகாப்பு முறைமையொன்று (Fire Alarm System) மற்றும் பாதுகாப்பு கெமரா முறைமையொன்று (CCTV) பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அருங்காட்சிய அச்சீட்டுப் பிரிவின் குறைபாடுகள்

---

(i) சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கமைய ISBN இலக்கத்தினை பெற்றுக்கொள்வதற்காக அச்சிடப்படும் அனைத்து புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தேசிய நூலக மற்றும் சுவடிகள் சேவைகள் சபையில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அருங்காட்சியகத்தின் அச்சீட்டுப் பிரிவில் அச்சிடப்படும் வெளியீடுகளாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வெளியீட்டுப் பிரிவில் வெளியிடப்படும் புத்தகங்கள் விலைகள் மற்றும் பண்டக் குறியீடுகள் (Bar Code) குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்த வெளியீடுகளை மீண்டும் விற்பனை செய்யக்கூடிய நிறுவனத்தால்

கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**3.10 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 06 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 123 | 72 | 51 |
| (iv) | ஆரம்ப நிலை | 258 | 190 | 68 |
| | மொத்தம் | 400 | 270 | 130 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாசிகசாலையில் இருக்க வேண்டிய பதவியணி 07 ஆன போதிலும், தற்போது 04 பேர் மாத்திரமே சேவையில் ஈடுபட்டுள்ளனர். அதற்கமைய நிலவும் 3 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஊழியர் பற்றாக்குறையால் தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்தின் பாதுகாப்பிற்காக கிடைக்கும் புத்தகங்களை பயன்பாட்டு பதிவேட்டிற்கு உள்ளடக்கும் போது சுமார் இரண்டு வருடங்களுக்கு அண்மிய தாமதக் காலமொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. அதனால் இந்த புத்தகங்களை பரிசீலனை செய்வதற்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு அண்மிய காலம் எடுக்கக்கூடுமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) கொழும்பு அருங்காட்சியகத்தில் 2012 மார்ச் 16 ஆந் திகதி நடைபெற்ற தொல்பொருளியல் பொருட்களின் களவு மற்றும் 2016 நவம்பர் 16 ஆந் திகதி இடம்பெற்ற அத்துமீறிய பிரவேசம் போன்ற சம்பவங்களின் அடிப்படையில் அருங்காட்சியகத்தின் பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் நிலவிய போதிலும், 2013 மே 23 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியும், அருங்காட்சியக பாதுகாவலர் (Curator) பதவிகள் 10 இன் 06 பதவிகளும், 05 பாதுகாப்பு உதவியாளர் பதவிகளும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இரு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளடங்குகின்ற போதிலும், இதுவரையிலும் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. அதனால், பாதுகாப்பு கெமரா கட்டமைப்பின் தொழில்நுட்ப பணிகளை அதனை நிறுவிய கம்பனியின் மேற்பார்வையின் கீழ் பேணுவதற்கு நேர்ந்திருந்தது.